©
தமிழ்நாடு அரசு
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 9] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 28, 2018
மாசி 16, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 12, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, நாள் 25 ஜனவரி 2018.]*

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும், நீக்குதலும்) சட்டத்தின் (மத்தியச்சட்டம் 37/1970) 35 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும், நீக்குதலும்) விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 35 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,—

(1) 17 ஆம் விதியில்,—

(a) துணை விதி (2) இல், ‘‘கருவூலப்பற்றுச்சீட்டு வாயிலாக,’’ என்ற சொற்றொடருக்குப்பின்னர், "அல்லது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக இணையவழி தொகை செலுத்துதல்", என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) துணை விதி (3)—இல், பின்வரும் துணை விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்., அதாவது:—

"(3) துணை விதி (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விண்ணப்பமும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக அல்லது பதிவு அலுவலரிடம் நேரடியாக அளிக்கப்பட வேண்டும் அல்லது பதிவு அஞ்சலில் அவருக்கு அனுப்பப்பட வேண்டும்.";

(2) 21 ஆம் விதியில்,—

(a) துணை விதி (3)—இல், பின்வரும் துணை விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

(3) துணை விதி (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விண்ணப்பமும், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக அல்லது உரிமம் வழங்கும் அதிகாரியிடம் நேரடியாக அளிக்கப்பட வேண்டும் அல்லது பதிவு அஞ்சலில் அவருக்கு அனுப்பப்பட வேண்டும்.’’;

(b) துணை விதி (5)—இல், ‘‘கருவூலப்பற்றுச்சீட்டு வாயிலாக,’’ என்ற சொற்றொடருக்குப்பின்னர், "அல்லது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக இணையவழி தொகை செலுத்துதல்", என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்;

(3) 29—ஆம் விதியில், (2) ஆம் துணை விதிக்குப்பின்னர், பின்வரும் துணை விதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்;, அதாவது:—

"(2A) துணை விதி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விண்ணப்பமும், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக அல்லது உரிமம் வழங்கும் அதிகாரியிடம் நேரடியாக அளிக்கப்பட வேண்டும் அல்லது பதிவு அஞ்சலில் அவருக்கு அனுப்பப்பட வேண்டும்;

ஆனால், அத்தகைய விண்ணப்பத்துடன், கருவூலப்பற்றுச்சீட்டு அல்லது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக இணைய வழி தொகை செலுத்துகை முறையில் உரிய கட்டணம் செலுத்தப்பட்டதற்கான சான்று இணைத்து அனுப்பப்பட வேண்டும்.";

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.